1971 ஜூலை 1] [திரு. கே. பி. கோபால்]

இருக்கிறது. ஆனல் அது இன்றுவரை கட்டப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெரியார் பகுதியில் மேம்பாட்டுத் திட்டம் சேர்க்கப்படவில்லை. மேலும் இதற்கு முன் பேசியதுபோல் ஒரு சில திட்டங்களை கால தாமதம் இல்லாமல் நிறைவேற்றவேண்டும். கம்பத்தில் ஒரு மருத்துவ மனை கட்டுவதற்கு 1970–71-ல் திட்டம் தீட்டப்படும் அதற்காக ஒரு வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அதற்கான அடிக்கல் நாட்டினர். பெரியார் ஏரியில் 30 சதவிகிதம் நீர் குறைந்து இருக்கிறது என்று கூறி இருக்கிருர்கள். மேலும் பருவ நிலை உறுதியற்றதாக இருக்கின்றது. கிடைக்கும் தண்ணீரை, நீர்க்கசிவு, மண் அரிப்பு, ஆக்கிரமிப்பு போன்றவற்றை தவிர்க்கும் பொருட்டு எல்லாக் கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக எனது தொகுதியில் வைரவன் கால்வாய். மேத்தலை மண்ணுடிகுளம் கால்வாயில் இந்த சிமெண்ட் லைனிங் முறையை அமுல்படுத்த வேண்டுகிறேன். இயற்கையின் ஒத்து ழைப்பும், அரசின் ஒத்துழைப்பும், எங்கள் பகுதி விவசாயிகளுக்கு கிடைத்தால், அரசின் திட்டங்களையும், அதிகாரிகளின் அறிவுரை களையும் ஏற்று மிக்க உற்சாகத்துடன் எங்கள் பகுதி விவசாயிகள் செயல்படுவர். பூமியின் ஆழ்பகுதியில் தண்ணீர் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள முடியாமல் பல விவசாயிகள் கிணறுகளை வெட்டி பெரும் நஷ்டத்திற்குள்ளாகியிருக்கிருர்கள். எனவே, அவர்களுக்கு அறிவுரை வழங்க ஊற்றுநீர் நிபுணர்களை என்னுடைய பகுதிக்கு ஏற்பாடு செய்தால் எனது தொகுதி விவசாயிகள் மிகவும் பயன் அடைவர் என்று கூறி, எனக்கு இந்த அளவு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

6. அறிவிப்பு.

உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் கைதானது குறித்து

MR. SPEAKER: I have to announce to the House that I have received a communication from the Inspector of Police, Tirunelveli Town, that Thiru S. Alagarswami, Member of the Tamil Nadu Assembly representing Kovilpatti Constituency, has been arrested under Section 151 Criminal Procedure Code today (1st July 1971) at 10-15 a.m. at Tirunelveli.

(5) 1971-72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, பொதுப்பணி மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முதற்கண் முக்கியமாக இன்று கேரளா சம்பந்தமாக ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது நாம் ஒப்பந்தம் செய்த சிறுவாணி தண்ணீர்